RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 0.34256/irjt224105

OPEN ACCESS

# வன்னி மரம் மடைப்பள்ளி சான்று கூறிய தொன்மம் - மாற்று வடிவங்கள்

ச. கோகுல் கிருஷ்ணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், இந்தியா

# The Myth told by Vanni Maram Madaipalli - Alternative Forms

S. Gokul Krishnan [a, *]

[a] Department of Tamil, Bharathiar University, Coimbatore, India

* Corresponding Author: gokulkrishnan@buc.edu.in

Received: 18-06-2022
Revised: 25-09-2022
Accepted: 03-10-2022
Published: 09-10-2022

Check for updates

## ABSTRACT

People living in a particular land are naturally seen as following various religions and cultures. This is perfectly normal. When people live together, their religious and cultural elements mix and spread. The blending, development, decline, and change among people are clearly visible in their customs. Explanations of ancient traditions are obtained from written versions of the epics. These, which were part of people's oral traditions, can be found in both written and oral forms in their various modified versions. However, the variations of the ancient explanatory stories found in written form help in reaching a consistent research conclusion. This article examines the ancient account concerning the woman from Vanni Maramadam Palaiyapalli, referred to as one of the ten prominent authors in the Vanchin Malai in Silappathikaram.

**Keywords:** Religions, Cultural elements, Silappathikaram, Vanni Maram, Madaipalli

## முன்னுரை

ஒரு நிலச்சூழலில் வசிக்கும் மக்கள் பல்வேறு வகையான சமயங்களை, பண்பாட்டினைப் பின்பற்றுகின்ற இயல்புடையவர்களாகக் காணப்படுவர். இது இயல்பான ஒன்றே ஆகும். மக்கள் கூடி வசிக்கும் பொழுது அவர்களுக்குரிய சமய, பண்பாட்டுக் கூறுகள் கலந்து பரவும். மக்களது கலப்பும் வளர்ச்சியும் தோய்வும் மாற்றமும் அவர்களது வழக்காறுகளில் தெளிவாகத் தெரியும். தொன்மங்களுக்கான விளக்கம் எழுத்துப் பிரதியான புராணங்களில் இருந்தே பெறப்படுகின்றன. அவைகள் மக்களின் வாய்மொழி வழக்காறாக இருந்த அடையாத்தை அவற்றின் மாற்று வடிவங்கள் எழுத்துப் பிரதி, வாய்மொழி என இரண்டு வகையாலும் பெறலாம். ஆனால் எழுத்துப் பிரதியாகக் கிடைக்கும் தொன்ம விளக்கக் கதைகளின் மாற்று வடிவங்கள் நிலையான ஆய்வு முடிவிற்கு வழிவகை செய்யும். சிலப்பதிகாரம் வஞ்சின மாலையில் பத்தினிப்பெண்டிர் எழுவரில் ஒருவராக குறிப்பிடப்படும் வன்னி மரம் மடப்பள்ளி சான்று காட்டிய பெண் குறித்த தொன்மத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

## வஞ்சின மாலை - கற்புடை மகளிர்

சிலப்பதிகாரத்தில் இப்பகுதி வழக்குரை காதையில் கோவலன் இறப்பிற்கு பாண்டியன் அவையில் நீதிகேட்டாள். தன் கணவனை ஆராயாது கொன்ற கொடுங்கோன்மையை எடுத்துரைத்தாள். கண்ணகி தன் கால் சிலம்பால் உண்மையை உரைத்தாள் இதை அறிந்த பாண்டியன் யானோ அரசன் யானே கள்வன் என்று கூறி கெடுக என் ஆயுள் என உயிர்த்

துறந்தான். பாண்டிமாதேவியும் அரசனின் அடிவணங்கி வீழ்ந்தாள். தொடர்ந்து அமைந்த வஞ்சின மாலை என்ற காதையில் அரச மாதேவி உயிர் நீத்ததை அறியாத கண்ணகி அவளை நோக்கி "ஒப்பற்ற கற்புடை மகளிர் பலர் பிறந்த ஊரில் நானும் பிறந்தேன், யானும் ஒரு பத்தினியாயின் அரசரோடு மதுரையையும் அழிப்பேன்" என்று வஞ்சினம் கூறி அகன்றாள்.

வஞ்சின மாலையில் கண்ணகி தனது ஊரில் இருந்த கற்புடை மகளிர் எழுவரைக் குறிப்பிடுகின்றாள். அவர்களுள் ஒருவர் "சான்று கூற முடியாத அஃறிணைப் பொருள்களான வன்னி மரத்தையும் மடைப்பள்ளியைத் தனக்குச் சான்று கூறும் பொருள்களாகச் சான்றோர் பலரும் அறிய, அவர்கள் முன்னிலையிலேயே கொணர்ந்து நிறுத்திக் காட்டினாள்".

பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண் நற்பகலே

வன்னி மரமும் மடைப்பள்ளியும் சான்றாக

முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள் (சிலப்பதிகாரம், கா.21: 4-6) (சோமசுந்தரனார், பெ.வே (உரை.ஆ.), 2021)

## இயைபு நிலை

வன்னி மரத்தையும், மடைப்பள்ளியையும் சான்று கூறச் செய்த பெண்ணின் தொன்மக் கதையைப் போன்றதொரு நிகழ்வு திருஞானசம்பந்தர் வரலாற்றில் இடம் பெறுகின்றது. திருஞானசம்பந்தரின் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணமும் திருவிளையாடற்புராணமும் எழுத்துரைக்கின்றன. அவர் வரலாறு முன்னைய நூலில் முழுமையாகவும் பின்னையதில் சில பகுதிகள் மட்டும் கூறப்பட்டுள்ளன. அதாவது பாண்டியன் சுரம் தீர்த்தமை, சமணரைக் கழுவேற்றியமை, வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்தமை ஆகியன திருஞானசம்பந்தர் மூன்று படலங்களாகத் திகழ்கின்றன.

சேக்கிழார் செய்த திருத்தொண்டர் புராணம், பரஞ்சோதி முனிவர் செய்த திருவிளையாடற் புராணத்தில் இரண்டு புராணங்களிலும் மேற்கூறிய நிகழ்வு இருவேறு வடிவங்களில் காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்தின் இப்பகுதிக்கு உரைக்குறிப்பினை வழங்கியுள்ள உ.வே.சாமிநாதையரும் ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் இப்புராணங்களில் காணப்படும் நிகழ்ச்சிகளை ஒப்பிட்டு விளக்கம் தந்துள்ளனர். (வேங்கடசாமி நாட்டார்,ந.மு., (உ.ஆ.), 2007)

## திருவிளையாடற் புராணம்

சோழ நாட்டில் வணிகர் குலத்தைச் சேர்ந்த ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது தங்கையின் மகன் மதுரையில் இருந்தான். அவள் முன்பே திருமணம் புரிந்து கொண்டவன். அவனுக்கே தனது மகளைத் திருமணம் செய்து மதுரையில் இருந்தான். கொடுப்பதாக உறுதி கொண்டிருந்தார். இது இவ்வாறு இருக்க ஊழினால் அவ்வணிகன் ஒரு நாள் காலமானான். கணவனது பிரிவை ஆற்றாது மனைவியும் இறந்தாள். வணிகனது மகள் தனித்து விடப்பட்டாள். இதை அறிந்த மருமகனும் சோழ நாடு வந்து தனது மாமன் மகளைத் திருமணம் செய்து கொள்ள தன்னுடன் மதுரைக்கு அழைத்துச் சென்றான்.

இருவரும் மதுரைக்குச் செல்லும் வழியில் திருப்புறம்பயம் என்ற ஊரில் இரவு தங்கினர். அப்பொழுது அவனைப் பாம்பு தீண்டியது. தனக்கு ஒரே பற்றாக இருந்தவரும் இறந்து போனதால் அப்பெண் அழுது புலம்பினாள். இதை அவ்வூரில் தங்கியிருந்த திருஞானசம்பந்தர் அறிந்தார். அவள் மீது இரக்கம் கொண்டு தமது அருள் நோக்கத்தால் அவனை உயிர்ப்பித்துக் கொடுத்தார். பின்பு அங்கிருந்த வன்னிமரம், கிணறு, சிவலிங்கம் என்னும் மூன்றனையும் சான்றாக வைத்து அவர்களுக்குத் திருமணம் செய்வித்தார். அவ்விருவரும் கணவன் மனைவியாய் மதுரையை அடைந்தனர். அவன் மதுரையில் மிகச் சிறந்த வணிகனாக வளர்ந்து தனது இருமனைவியருடன் இனிது வாழ்ந்திருந்தான். இருந்த போதிலும் மூத்தாளுக்கு இளையவள் மீது வெறுப்புணர்ச்சி

இருந்து வந்தது. இளையவளை மூத்தவள் தன் கணவனின் காமக்கிழத்தி என்று ஏசினாள். மேலும் அவளது திருமணத்திற்குச் சாட்சி கேட்டாள். அதற்கு இளையவள் 'என் கொழுநன் பாம்பால் தீண்டப்பட்டு இறந்த பொழுது அரிய உயிரினை அளித்த காழிவேந்தன் திருஞானசம்பந்தரின் ஆணையால் கூறுகின்றேன். என் கணவன் திருப்புறம்பயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானும், வன்னி மரமும், கிணறும் காணத் திருமணப் புரிந்தான். அம் மூன்றும் சான்றுகளாக உள்ளன' என்று கூறினாள். மேலும் தனது கற்புத் திறத்தாலும் தெய்வ நம்பிக்கையாலும் அம்மூன்றையும் சான்றாகக் கொண்டு வந்து நிறுத்தினாள். இதனால் மூத்தாள் நாணிக் குறுகிப் போனாள்.

அன்னபோ திளையாண் மூத்தாட் கொண்டுபோ யால வாயெம்

முன்னவன் றிருமுன் றாழ்ந்து காட்டுவாண் முகிறோய் சென்னி

வன்னியீ கிலிங்க மீது கிணறிதென் மன்றற் சான்றாய்த்

துன்னிய வென்றாள் கண்டான் முடித்தலை தூக்கி நின்றாள் (திருவிளையாடற் புராணம், பா.3300) (பட்டுச்சாமி ஓதுவார், தி. வித்துவான், 2004)

இந்நிகழ்ச்சியானது திருவிளையாடற் புராணம் அறுபத்து நான்காம் திருவிளையாடலான 'வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்' என்ற படலத்தில் இடம் பெறுகின்றது.

## திருத்தொண்டர் புராணம்

திருத்தொண்டர் புராணம் திருஞானசம்பந்தரின் வரலாற்றை மிக விரிவாகப் பேசுகின்றது. அப்புராணத்தில் மேற்கூறிய திருவிளையாடற் புராணக் கதையின் ஒரு பகுதி மட்டுமே இடம் பெறுகின்றது. வைப்பூரில் உள்ள தாமன் என்னும் வணிகன் மகளிர் எழுவரில் இளையவளாகிய கன்னியும் அவளது அத்தை மகனும் தங்களது ஊரினுக்குச் சென்று கொண்டிருந்த பொழுது திருமருகல் என்ற ஊரில் தங்கியிருந்தனர். அங்கு அவனைப் பாம்பு தீண்டியது. அதனால் அவள் திக்கற்று மனம் புலம்பி அழுதனள். அவ்வூரின் கண் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தர் இதைக் கேட்டு நிகழ்ந்ததை உணர்ந்து 'சடையன் எனுமால்' என்னும் பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தார். பின்னர் அவர்களைத் திருமணம் செய்து கொள்ளும்படிக் கட்டளையிட்டார்.

பொங்கு விடம் தீர்ந்து எழுந்து நின்றான் சூழ்ந்த

பொருவில் திருத் தொண்டர் குழாம் பொலிய ஆர்ப்ப

அங்கையினை உச்சியின் மேல் குவித்துக் கொண்டு

அங்கு அருள் காழிப் பிள்ளையார் அடியில்வீழ்ந்த

நங்கை அவள் தனை நயந்த நம்பியோடு

நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்

மங்குல் தவழ் சோலை மலி புகலி வேந்தர்

மணம் புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார். (திருத்தொண்டர் புராணம், பா. 2380) (சுந்தரமூர்த்தி,கு(உரை.ஆ), 2014)

இந்நிகழ்ச்சி திருத்தொண்டர் புராணம், திருஞானசம்பந்தர் புராணத்தில் பாடல் 473 தொடங்கி 483 பாடல் வரை இடம் பெற்றுள்ளது.

## தொன்மக் கதை அமைப்பு

திருவிளையாடற் புராணத்தில் சிவலிங்கம், வன்னிமரம், கிணறு சான்று வைத்தது கூறப்பட்டுள்ளது. ஆனால் திருத்தொண்டர் புராணத்தில் இது கூறப்படவில்லை. திருவிளையாடற்

புராணக் கதை திருப்புறம்பயத் தலவரலாற்று நூலிலும் இடம் பெற்றுள்ளது. இறைவனே காட்சியாக வந்தமையால் அத்தல இறைவனுக்குச் 'சாட்சி நாதர்' என்று பெயர். பாடல் பெற்றத் தலங்களாகிய திருப்புறம்பயம், திருமருகல் தேவாரப் பாடல்களில் இக்கதை பற்றிய குறிப்பு இல்லை. சிலப்பதிகாரத்தில் வன்னி மரமும் மடைப்பள்ளியும் சான்று நின்றதாகக் கூறப்பட்டுள்ளது. சிவலிங்கம் பற்றிய செய்தியில்லை. மேலும் சிலப்பதிகாரத்தில் கதை மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

இம்முரண்பாடுகள் பற்றி ந.மு.வேங்கடசாமி நாட்டார் 'பெரிய புராணத்தில் (திருத்தொண்டர் புராணம்) திருப்புறம்பய நிகழ்ச்சி கூறப்படாமையானும், சிலப்பதிகாரம் சம்பந்தர் காலத்திற்குச் சில நூற்றாண்டுகளின் முன்பு தோன்றிய தாகலானும் சம்பந்தப் பிள்ளையார் திருமருகலில் விடம் தீர்த்த நிகழ்ச்சியை வடமொழியிற் புராணம் வகுத்தோர் திருப்புறம்பயத்தில் அதற்கு முன்னிகழ்ந்ததொரு வரலாற்றுடன் பொருந்தி விட்டனர் போலும் எனக் கருதப்படுகின்றது (வேங்கடசாமி நாட்டார், ந.மு.1999) என்று கூறியுள்ளார்.

சிலப்பதிகாரம் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பியமாகும். சேக்கிழார் செய்த திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. கி.பி.பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்த பரஞ்சோதி முனிவர் செய்த நூல் திருவிளையாடற் புராணம். கால அடிப்படையில் அணுகினால் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட நிகழ்வு காலந்தோறும் வளர்ந்து திருவிளையாடற் புராணத்தில் முழுகதை நிகழ்வாக வளர்ந்ததுள்ளது. சிறு கூறாக இருந்தது நிகழ்ச்சியாக மாறி முழுகதையாக வளர்ந்து திருவிளையாடற் புராணத்தில் இடம்பெற்றுள்ளது என்பதாக அறியலாம்.

கணவன் மனைவி - பாம்புதீண்டுதல் - கணவன்இறத்தல் உயிர்ப்பித்தல்-கற்பிற்குச் சான்று கூறுதல் என்ற கதைக் கூறுகளைக் வெவ்வேறு நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கதை சிலப்பதிகாரம் வஞ்சின மாலையில் கற்பு என்ற கட்டமைப்பில் காணப்பட்டுள்ளது. அதனால் வன்னிமரம், மடைப்பள்ளி சான்று கூறிய நிகழ்ச்சி மட்டும் எடுத்தாளப் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர், சிவபெருமான் என்ற இருவரின் பேராற்றலை அறிவுறுத்தல் என்ற காரணத்தால் திருவிளையாடற் புராணத்தில் உயிர்ப்பித்தல், சான்று காட்டுதல் என்றளவில் கதை விரிவாகப் பேசப்படுகின்றது. திருத்தொண்டர் புராணத்தில் திருஞானசம்பந்தரின் பேராற்றலை மட்டும் புலப்படுத்துதல் என்ற நோக்கம் பற்றி உயிர்ப்பித்தல் மட்டும் இடம் பெற்றுள்ளது.

## முடிவுரை

தொன்மங்கள் காலம் சூழலுக்கு ஏற்ப பல்வேறு வடிவங்களாக மாற்றம் அடைகின்றன. அக்கதைகளை மூலக்கதைகளின் மாற்று வடிவங்கள் என்று கூறலாம். அந்தவகையில் கற்பு நிலைக்கு அடையாளமாக சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட வன்னிமரம் மடைப்பள்ளி சான்று காட்டிய பெண் குறித்தான தொன்மம் பக்தி இயக்க வளர்ச்சியில் பல அற்புதங்கள் நிறைந்தாக வளர்ந்துள்ளதை காணலாம். தொன்மங்கள் கதைச் சமயச்சார்படையும் போது வெவ்வேறு வகையில் வளர்ச்சிநிலை பெறுவது இயல்பாகின்றது.

## References


Pattusamy Odhuvar, T. Viththuvan, (2004) Thiruvilayadal Puranam (Annotated Edition), Kasiththirumadam, Thiruppanandal.

Somasundaranar, P.V. (2021) Silappathikaram, Thirunelveli South Indian Saiva Siddhanta Publications Limited, Chennai.

Sundaramoorthy, K. (2014) Thiruththondar Puranam, Gnanasambandham Publications, Tharumaiyadeen.

Venkatasami Nattar, N.M. (1999) Silappathikaram, Thirunelveli South Indian Saiva Siddhanta Publications Limited, Chennai.

Venkatasami Nattar, N.M. (2007) Thiruvilayadal Puranam, Mullah Nilayam, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License